சுருக்கம்

விடுமுறை – 28 ஜனவரி 2021, வியாழக்கிழமை – தைப்பூசத் திருவிழா – செலாவணி முறிச்சட்டம் 1881–ன் கீழ் பொது விடுமுறை அறிவித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பொது (பல்வகை)த் துறை

அரசாணை (நிலை) எண். 07

நாள்: 05.01.2021
சார்வரி, மார்கழி –21
திருவள்ளுவர் ஆண்டு 2051
படிக்கப்பட்டது :–

அரசாணை (நிலை) எண்.554, பொது (பல்வகை)த் துறை, நாள். 27.10.2020

ஆணை:

தைப்பூசத் திருவிழாவினை முன்னிட்டு, 28.01.2021 (வியாழக்கிழமை) அன்று ஒரு நாள் மட்டும் செலாவணி முறிச்சட்டம் 1881–ன் கீழ் பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது. மேலும், இனி வரும் ஆண்டுகளில் தைப்பூசத் திருநாளை பொது விடுமுறை பட்டியலில் சேர்க்க ஆணையிடப்படுகிறது. இப்பொது விடுமுறையானது தமிழ்நாட்டிலுள்ள அரசு அலுவலகங்கள், அரசினால் அமைக்கப்பட்ட வாரியங்கள் மற்றும் கழகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அதிகார அமைப்புகள், கூட்டுறவு வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகள், தொழிற்துறை நிறுவனங்கள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்கள் முதலியவற்றுக்கும் பொருந்தும். பிற நிறுவனங்களும் இவ்விழாவின் சிறப்பினை கருத்தில் கொண்டு தங்களது அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுக்கு பொது விடுமுறை நாளாக அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

2. கீழ்க்காணும் அறிவிக்கை தமிழ்நாடு அரசின் சிறப்பு அரசிதழில் வெளியிடப்படும்:

> மத்திய அரசின் உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் 08.06.1957 – ஆம் நாளிட்ட பொது–1, 20–25–26–ஆம் எண் அறிவிக்கையின்படி 1881–ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் XXVI/1881) 25–ஆம் பிரிவில் "விளக்கம்" என்பதன் கீழ் "தைப்பூசத் திருவிழாவினை" முன்னிட்டு, 2021 ஆம் ஆண்டு, ஜனவரி, 28, வியாழக்கிழமை அன்று பொது விடுமுறை நாளாக அறிவிக்கப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

க. சண்முகம்
அரசு தலைமைச் செயலாளர்

பெறுநர்

பணி மேலாளர், அரசு மைய அச்சகம்,
சென்னை–79. (தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுவதற்காக)
அனைத்து அரசுச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை–9.

த.பி.பா.....

செயலாளர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை—9.
தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகள், சென்னை—9.
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், தலைமைச் செயலகம், சென்னை—9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
அனைத்து நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள்.
அனைத்து பொதுத் துறை நிறுவனங்கள்/ கழகங்கள் / அனைத்து நகராட்சிகள்/
அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள் / அனைத்து பேரூராட்சிகள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை—1 மற்றும் ஏனைய முன்னணி வங்கி நிறுவனங்கள்.
முதலமைச்சரின் செயலாளர், முதலமைச்சர் அலுவலகம், சென்னை—9.
தனி அலுவலர், முதலமைச்சரின் தனிப்பிரிவு, சென்னை—9.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை—22.
தகவல் ஆணையம், தேனாம்பேட்டை, சென்னை—18.
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை—3.
செயலாளர், மாநில மனித உரிமைகள் ஆணையம், திருவரங்கம் கட்டிடம்,
143, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை, சென்னை—28.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை—104.
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளை, மதுரை.
இயக்குநர், செய்தி மற்றும் பொதுத் தொடர்பு, தலைமைச் செயலகம், சென்னை—9.
தலைமைச் செயலாளர், ஆந்திர பிரதேச அரசு, ஹைதராபாத்.
தலைமைச் செயலாளர், தெலுங்கானா அரசு, ஹைதராபாத்.
தலைமைச் செயலாளர், கர்நாடக அரசு, பெங்களூரு.
தலைமைச் செயலாளர், கேரள அரசு, திருவனந்தபுரம்.
தலைமைச் செயலாளர், புதுச்சேரி அரசு, புதுச்சேரி.
அனைத்து முன்னணி (ம) சமய நிறுவனங்கள்.
அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பணி நிறுவனங்கள்.
மாநிலத்திலுள்ள அனைத்து பல்கலைக் கழகங்கள்.
அனைத்து வர்த்தக மன்றங்கள்.
மத்திய அரசின் அனைத்து அமைச்சகங்கள் மற்றும் ஏனைய மாநில அரசுகள்.
பொது மேலாளர், தெற்கு ரயில்வே, சென்னை—3.
அனைத்து மத்திய அரசு அலுவலகங்கள்.
மண்டல மேலாளர், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம், சென்னை—2.
தலைவர், துறைமுக பொறுப்புக் கழகம், சென்னை—1.
துணைத் தலைமை தகவல் அதிகாரி, செய்தி தகவல் அமைப்பு,
மத்திய அரசு, சென்னை—6.
இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை—9.

**நகல்:**

மாண்புமிகு பேரவைத் தலைவரின் நேர்முக உதவியாளர்,
சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை—9.
அமைச்சர்களின் அனைத்து முதுநிலை நேர்முக உதவியாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை—9.
தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், தலைமைச் செயலகம், சென்னை—9.
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், பொதுத்துறை, சென்னை—9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

05/01/2021

பிரிவு அலுவலர்

05/01/2021